புறவழிச் சாலை அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 332, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

332—

சொந்தக் கட்டடம்

***38296—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், பெரியகரும்பூர் ஊராட்சி, குமரஞ்சேரி மற்றும் பெரியகரும்பூர் பகுதிகளிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பெரியகரும்பூர் ஊராட்சியில் 2009 ஆம் ஆண்டு முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் குமரஞ்சேரி அங்கன்வாடி மையத்திற்கு சர்வே எண் 69—ல் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1982 முதல் ஊராட்சிமன்றக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் பெரியகரும்பூர் அங்கன்வாடி மையத்திற்கு சர்வே எண் 252—ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்டும் பணிகள் துவக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

[2014 ஆகஸ்ட் 5

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா; தமிழ்நாடு என்று சொல்லடா, நாளை தலைமுறை வாழ பல திட்டம் தந்திட்ட அம்மா நாடு என்று பெருமை கொள்ளடா" (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற சரித்திர சாதனை படைத்த சாதனைத் தாயை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பொன்னேரி தொகுதிக்குட்பட்ட மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய ஏலியம்பேடு ஊராட்சியில், ஏலியம்பேடு காலனி மற்றும் சேலியம்பேடு பகுதிகளிலே அமைந்துள்ள அங்கன்வாடி மையம் பழுதடைந்துள்ளது. தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தருவார்களா என மாண்புமிகு அம்மாவின் அரசையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்கெல்லாம் பழுதடைந்த கட்டடங்கள் இருக்கிறதோ, மிகவும் மோசமான நிலையிலே இருக்கிறதோ, அந்த அங்கன்வாடி மையங்களை இடித்துவிட்டு, புதிய மையங்களைக் கட்டித் தர வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கிற குழுவின் மூலமாக ஆய்வு செய்து, திருவள்ளூர் மாவட்டத்திலே புதிதாகக் கட்டப்பட இருக்கும் மொத்த மையங்களின் எண்ணிக்கை 154. அந்த 154 மையங்களிலே மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் குறிப்பிடுகின்ற ஊராட்சிகளும் அடங்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் விருப்பப்படி, அவர் கேட்டுக்கொண்டிருக்கின்ற அந்த ஊராட்சிப் பகுதிகளுக்கு அங்கன்வாடி மையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 333, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

333—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***20587—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, செய்யூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழியாய் போற்றும் மொழியோடு, தமிழன் வழி வழியாய் கட்டுகின்ற வேட்டியின் மாண்பினை அழியாது காத்திட்ட எங்கள் அரணே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தலைவிதியினை மாற்றும் 110 விதி எண் 110-ன்கீழ் நிகரில்லா அறிக்கைகளைத் தந்து, தமிழக வளர்ச்சிக்கு வித்திடும்